
கவின்
කවින් Kawin
ISSN: 2448-9913
15.01.2016
ரூபா 30/-
இது ஒரு சமூகத்தின் சஞ்சிகை

# குப்பை மலை



கொழும்பு மாநகர குப்பைகள் எல்லாம்
குவிகின்றன குன்றுகளாய் கொலன்னாவையில்,
எழுப்பும் துர்நாற்றம் எட்டும் பக்கங்களில்,
இருப்பவர் இதய சுவாசத்தில் எதிரொலிக்கும்.
பழுதான காற்றாகி, நஞ்சாகி, பிஞ்ஞான
பாலகர்களை பாதிக்கும். சுத்த சுவாசம்
சூழவுள்ளோருக்கு இல்லை. சூழல் மாசடைய,
மாநகரம் நாறும் மனிதவுரிமை மீறும்.


ஆசிரியர்: கலா விஸ்வநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவை வளர்த்துக் கொள்வதுதான் மனித இனத்தினுடைய இலட்சியமாக இருக்கவேண்டும். அறிவுதான் சக்தி

– சுவாமி விவேகானந்தர்





வகவம் கவியரங்கின் போது பிரதம அதிதியாக வருகைத் தந்திருந்த பிரபல எழுத்தாளர் மு.சிவலிங்கம் அவர்களுக்கு வகவம் தலைவர் கவிமணி நஜ்முல் ஹுசைன் "கவின்" இதழை கையளிக்கிறார். அருகில் வகவம் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், வகவம் பொருளாளர் கலையழகி வரதராணி, நடுவில் 'கவின்' ஆசிரியர் கலா விஸ்வநாதன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

'கவின்' சஞ்சிகையுடன் சகல தொடர்புகளுக்கும்


**'Kawin' Editor**

**P.O.Box: 2281 - Colombo**

**Tel: 0776576728**

**Email: kawinmagazine@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின்

"சுருக்கந்தான் அறிவின் ஆன்மா"

- ஷேக்ஸ்பியர்

ஆண்டு - 03 மாசிகை - 01

# பூத்தது புதுவருடம்

"ஆண்டொன்று போனால் வயது ஒன்று கூடும்" ஆனால் ஒவ்வொரு முறையும் வருடம் புதிதாக பூத்துக்கொண்டே இருக்கின்றது. ஒவ்வொரு புதுவருடத்தையும் போற்றி, வரவேற்பது உலக வாழ்வில் இயல்பாகி விட்டது. ஒருவருக்கு ஒருவர் புத்தாண்டு வாழ்த்துக்களை பரிமாறி பூரிப்பது மனித செயலாகிவிட்டது.

இன, மத, பேதங்களைக் கடந்த நிலையில் எல்லோரும் 2016ஆம் ஆண்டை ஆர்வமாக வரவேற்கின்ற வேளை "இயேசு நாதர் பிறந்த தினம், நபிகள் நாயகம் பிறந்த தினம், என்பன டிசம்பர் மாத இறுதியில் வணக்கமுடன் கொண்டாடப்பட்டன. அதோடு தமிழரின் திருநாள் தைமாதப் பிறப்பும் ஜனவரி நடுப்பகுதியில் பொங்கல் பண்டிகை, புதுவருடத்தின் ஆரம்ப விழாவாக அமைந்து விடுகின்றது.

"ஒற்றுமை மற்றும் அதனூடாக வலுவடையும் கூட்டு ஒத்துழைப்பினையும் சகவாழ்வையும் பாதுகாப்பதே புத்தாண்டின் எமது இலட்சியங்களாக அமைய வேண்டும்" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"2016 புதுவருடமானது மக்கள் எதிர்பார்ப்புக்களை வெற்றியடையச் செய்து, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் ஒழுக்கநெறி மிக்க சமூக சூழ்நிலையொன்றினுள் நுழைவதற்கான விரிவான ஒரு சந்தர்ப்பத்தை இலங்கை சமூகத்துக்கு வழங்கும் வகையில் பிறக்கிறது" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நம்பிக்கையுடன் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

"தேசிய பிரச்சினைக்கான அர்த்தமுள்ள தீர்வை அடைதல், நிலையான சமாதானத்தையும், புரிந்துணர்வையும் நிலைநாட்டல் போன்ற இமாலய பணிகளில் அடைவதற்கு புதிய ஆண்டில் நாட்டின் சகல பிரஜைகளும் ஒன்றிணைய வேண்டும்" என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் எதிர்பார்க்கின்றார்.

இங்ஙனமாக சகலக் கட்சித் தலைவர்களும், பெரியார்களும், பொதுமக்களும் புதுவருடத்தை ஓர் இலக்கு நோக்கிய பயணமாக ஆரம்பிக்க ஆசைப்படுகின்றனர். அதற்காக எத்தனிக்கின்றனர்.

ஒவ்வொருவரும் புதுவருடம் பிறந்ததும் புதிதாக தம்மை புதுபித்து வாழ முற்படுகின்றனர். புதிய நோக்குடன் நடந்ததை விட்டு, நாளை நடப்பவை நல்லவையாகட்டும் என்பதே எமது எல்லோரின் எதிர்பார்ப்பாகும். புதுவருட பிறப்பின் போது ஏற்படும் புதிய நம்பிக்கை வருட இறுதிவரை தொடர வளமான எண்ண சக்தியை உறுதியாய் பதிந்துக் கொள்வோம்.

எல்லோருக்கும் இனிய புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில செய்திகள்....

## வத்தளை தமிழ்ப் பாடசாலை வடிவமைப்போம்



அமைச்சர் மனோ கணேசன்

வத்தளை தமிழ்ப் பாடசாலை என்ற கனவு 20 ஆண்டுகால பிரச்சனை. இந்த காலக்கட்டத்துக்குள் எத்தனையோ தமிழ் மக்கள் பிரதிநிதிகள் ஆளும் அணிகளில் இருந்தார்கள். அமைச்சுப் பதவிகளிலும் இருந்தார்கள். அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் இருந்தன. அவர்களில் சிலர் இயன்ற முயற்சிகளை செய்தார்கள். ஆனால் வத்தளையில் தமிழ்ப் பாடசாலை இதுவரையில் அமைக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

இன்று முதன்முதலாக மேல்மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஓர் அமைச்சரவை அமைச்சராக பதவியேற்றுள்ளேன். எனது அதிகாரங்களை நமது இன நலன் கருதி நான் முழுமையாக பயன்படுத்துவேன்.

"மேல்மாகாணம் உட்பட முழுநாட்டிலும் வாழும் தமிழ் மக்கள் தொடர்பாக அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கப்படும் கடப்பாடும் உரிமையும் ஓர் அமைச்சரவை அமைச்சர் என்ற முறையில் எனக்கு உண்டு" என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வத்தளை நகரசபை மண்டபத்தில் ஜனநாயக மக்கள் முன்னணி கம்பஹா மாவட்ட அமைப்பாளர் **எஸ்.சசிகுமார்** ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது;

"இது தொடர்பில் நான் ஏற்கனவே **பிரதம ரணில் விக்கிரமசிங்க,** கல்வி அமைச்சர் **அகில விராஜ் காரியவசம்,** கல்வி இராஜாங்க அமைச்சரும் எங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணிப் பிரதித் தலைவருமான **வி.இராதாகிருஷ்ணன்,** மேல்மாகாணசபையின் ஆளுநர் **கே.சி.லோகேஸ்வரன்,** முதல்வர், கல்வியமைச்சர், வத்தளை ஐ.தே.க.அமைப்பாளர், அமைச்சர், நண்பர் **ஜோன் அமரத்துங்க** ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளேன்.

புதிய ஆண்டில் இதை ஒரு முன்னுரிமைப் பிரச்சனையாகக் கருதி தீர்ப்போம். எனவே இப்பிரச்சனையில் அக்கறையுள்ள அனைவரும் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பணியாளர் தருண் விஜய்



"தமிழ்மொழியை பாரத நாடு முழுவதும் கற்கவேண்டும்" என்று முழங்கி வருவதுடன் திருக்குறளின் உன்னதத்தை பாராளுமன்றம் உட்பட பல சபைகளில் எடுத்துரைப்பவர். திருக்குறளை பாரதத்தின் அனைத்து மாநில மொழிகளிலும் பாடசாலை பாடத்திட்டத்திலும் இணைக்க முயற்சி மேற்கொண்டு வருபவர் இந்திய பாராளுமன்ற உறுப்பினர் தருண் விஜய். இவர் ஊடக துறையில் பணியாற்றி வருகின்றார்.

இவரது சமீபத்தைய இலங்கை விஜயத்தின் போது "சிவபூமி" இதழுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் –

"மிகச் சிறந்த தமிழ் மொழியினை தமிழ் பேசாத இந்திய மக்களிடம் கொண்டு சேர்க்க முயன்று வருகின்றேன். தமிழ்நாட்டைத் தவிர ஏனைய மாநில பாடசாலைகளில் தமிழ் மொழியை விருப்பு மொழியாக வைக்கவேண்டும் என்று முயற்சித்து வருகின்றேன். இது பல மொழி பேசுபவர்களையும் தமிழ் மொழியைக் கற்க உதவும்".

"திருக்குறளை எல்லா மாநிலங்களிலும் பாடசாலைகளில் பிராந்திய மொழிகளில் பாடத்திட்டமாக மத்திய அரசு அமுல்படுத்தியுள்ளது. சுதந்திர இந்தியாவில் முதன்முறையாக திருவள்ளுவரின் சிலையை இந்திய பாராளுமன்றத்தில் நிறுவ முயன்று வருகின்றேன்."

"திருக்குறள் நம்மை இணைக்கும் பெரும் சக்தி. இலங்கையின் தமிழ், சிங்கள மொழிகளில் திருக்குறள் கற்பிக்கப்படவேண்டும். திருவள்ளுவர், புத்தரின் சிந்தனைகளாலேயே இந்நாட்டில் அமைதி ஏற்படும்" என்று தமிழ்ப் பணியாளரான தருண் விஜய் தெரிவித்துள்ளார்.

"சிவபூமி" இந்து தர்மம் சம்பந்தமான ஆக்கங்களுடன், விஞ்ஞான விளக்கங்களுடன், சகலரும் புரிந்துக் கொள்ளும் எளிமையான ஆளுமையுடன் வெளிவரும் இதழாகும். இவ்விதழை **இலக்கம் 153/1 யூனியன் பிளேஸ், கொழும்பு – 02 எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். தொலைப்பேசி எண்கள் 0771986710, 0778393683.**

---

# மலையகத்திற்கான இந்திய வீடமைப்புத் திட்டம்

மலையகத்திற்கான இந்திய வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலிய பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் கூறியுள்ளார்.



இந்தியப் பிரதித் தூதுவரும் மலையக புதிய கிராம உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இச்சந்திப்பில் இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் மற்றும் அதிகாரிகளும் அமைச்சர் பழனி திகாம்பரம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், அமைச்சின் செயலாளர் திருமதி இரஞ்சனி நடராஜப்பிள்ளை, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவன தலைவர் வீ.புத்திரசிகாமணி மற்றும் அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய நாளாயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளுக்கு தேவையான முழுமையான நிதியும் இந்திய அரசின் பூரண நன்கொடையாக அமையவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வகவம்” கவிதா நிகழ்வுகள்

வலம்புரிகவிதா வட்டத்தின் மாதாந்த பௌர்ணமி தின கவியரங்கு 25.11.2015 தினத்தன்று கொழும்பு – 12 அல்ஹிக்மா கல்லூரியில் **கவிமணி எம்.சி.எம். சுபைர்** அரங்கில் **கவிமணி நஜ்முல் உசைன்** தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக லேக்க வுஸ் தமிழ் வெளியீடுகளுக்கான ஆலோ சகர் **எம்.ஏ.எம். நிலாம்** அவர்கள் கலந்து கொண்டு **கவிமணி சுபைர்** பற்றி சிறப்புரையாற்றினார்.



“இலங்கையில் மாத்திரமின்றி இந்தியா, மலேசியா சஞ்சிககைளிலும் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. இவரது ஆக்கங்கள் இவரிடமிருந்து கேட்டுப் பெற்றே பிரசுமாகின என்பது குறிப்பிடத்தக்கது. பண்டாரவளையில் இருந்து “மணிக் குரல்” எனும் பத்திரி கையை நடத்தினார். சிறு வர் இலக்கியம் படைப்பதிலும் சிறப்புற்று விளங்கிய கவிமணி சுபைர் அவர்கள் **“மறையும் மனங்கள்”, “எங்கள் தாய்நாடு”** போன்ற நூல்களைத் தந்துள்ளார்.”

“எமது இளம் சமூதாயத்திற்கு கவி மணி சுபைர் போன்றோரை அறிமுகம் படுத்துவதோடு, தென்னிலங்கை இலக்கியவாதிகளையும் அறிமுகம் செய்ய வேண்டும். தென்னிலங்கை இலக்கிய ஆணி வேரை கண்டறிவதும் அதனைப் பிரபல்யம் படுத்துவதும் எமது பொறுப்பு எனவும் பிரதம அதிதி எம்.ஏ.எம். நிலாம் தமது உரையில் தெரிவித்தார்.

**கவிஞர் எம்.ஏ.எம்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கவியமர் வில்**



**கலைவாதி கலீல்**

**நசீதா அன்சார்**

**அஸ்ரப் சியாப்தீன்**

**சங்கர் கைலாஷ்**

**கவிக்கமல் ரஸீம்**

**க.லோகநாதன்**

**இப்னு அஸுமத்**

**எம். பிரேம்ராஜ்**

**நாச்சியார்த்தீவு பர்வின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.பி.எம். நிஸ்வான்

அப்துல் லத்தீப்

எஸ்.தனபாலன்

மட்டக்குளி நவுஸாத்

"தமிழ்த் தென்றல்" அக்பர் அலி

உஸ்மான் மரிக்கார்

வெலிமடை ஜஹாங்கீர்

ஆகிய கவிஞர்கள் தமது கவிதைகளை அரங்கேற்றினர்.

பிரதம அதிதி எம்.ஏ.எம். நிலாம் அவர்களுக்கு "ஸ்தாபகர் உரை" நூலின் ஒரு பிரதியை வலம்புரி கவிதா வட்ட ஸ்தாபகத் தலைவர் கவிஞர் தாஸிம் அகமது அவர்களால் கையளிக்கப்பட்டது.

இளநெஞ்சன் முர்ஷிதீன் அவர் களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான மேற்படி அமர்வு, ஸ்தாபக உறுப்பினர் எஸ்.ஐ. நாகூர்கனி அவர்களின் நன்றியுரையுடன் நிறைவுப்பெற்றது.

அல்ஹாஜ் அஷ்ரப் அஸீஸ் அவர் களின் ஏற்பாட்டில் அனைவருக்கும் மதிய போசனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

வலம்புரி கவிதா வட்டத்தின் மாதாந்த கவியமர்வு 24.12.2015 பூரணைத் தினத்தன்று குணசிங்கப்புர அல்ஹிக்மா கல்லூரியில் கவிமணி நஜ்முல் உசைன் தலைமையில் நடைபெற்றது.

அங்கையன் கைலாசநாதன் அரங்கில் வகவம் ஸ்தாபக உறுப்பினர் கவிஞர் எஸ்.ஐ.நாகூர்கனி தலைமையில் நடைபெற்றது.



இக்கவியரங்கில்

எம். பிரேம்ராஜ்

க.லோகநாதன்

வெலிமடை ஜஹாங்கீர்

இப்னு அஸுமத்

எம்.பி.எம். நிஸ்வான்

சங்கர் கைலாஷ்

சுஹைர்

எஸ். ஜனுஸ்

கலைக்கமல் ஆகியோரின் கவிதைகள் அரங்கேற்றப்பட்டன.

அங்கையன் கைலாசநாதன் பற்றி ஓர் ஆய்வுரையை வதிரி சி.ரவீந்திரன் பிரதம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதியாக கலந்துகொண்டு சிறப்பாக முன்வைத்தார்.

"மக்கள் பிரச்சனைகளை முன்னிறுத்தி கவிதைப் பாடியவர் அங்கையன் கைலாசநாதன். பேராதனை பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான கைலாசநாதன் கவிதையோடு நாவல் துறையிலும் ஈடுபட்ட ஒருவர். பேராதனைப் பல்கலைக்கழக குறுநாவல் போட்டியில் பரிசுப் பெற்றார். இக் குறுநாவல் பிறகு நூலாக வெளியிடப்ப ட்டது.

38 கவிதைகள் அடங்கிய "அங்கை யன் கவிதைகள்" நூல் 2002ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அங்கையன் மெல்லிசைப் பாடலகள் எழுதுவதிலும் பிரபலம் பெற்ற முக்கிய சிலருள் ஒருவராக இருந்தார்.

ஈழநாடு துணையாசிரியர், வீரகேசரி துணையாசிரியராகவும் கடமைப்புரிந்த கைலாசநாதன் "சமூக தீபம்" காலாண்டு சஞ்சிகையையும் "சாம்ராஜ்ஜியம்" என்ற சஞ்சிகையையும் நடத்தியுள்ளார்.

38 வருடங்களே வாழ்ந்த அங்கை யன் கைலாசநாதன் ஈழத்து இலக்கியத்துறையிலே தடம் பதித்துச் சென்றுள்ளார்" என்று பிரதம அதிதி வதிரி.சி.ரவீந்திரன் குறிப்பிட்டார்.

பிடித்தக் கவிதை

# காலக் கனிகள்



உ. நிசார்

வசந்த வாயிலில் நின்று
சுவைசொட்டும் திராட்சைகளாய்
என்னைச் சுவைக்க நீ
உன்னை சுவைக்க நான்......என
ஒருவரையொருவர் முந்திக்கொள்ள அங்கே
பசியின் அகோரம் தெரிந்தது
சுவைக்கும்போது கூட
அதிலொரு வேகம் புரிந்தது.

காலச் சுழற்சியுடன்
பூத்தவை பூத்து....
காய்த்தவை கனிந்து
வசந்தகாலம் விடைபெற
இலையுதிர் காலம் எம்மை எதிர்க்கொண்டு
அழைத்தது.

அப்போது....
போதைத் தரும் திராட்சைக்குப் பதிலாக
சுவைமிகுந்த மாங்கனியின்
போசாக்குடன் ஒருவருக்கு ஒருவரின்
அனுசரணை கிடைக்க
அதிலொரு
ஆத்ம திருப்தியும் இருக்கிறது.

கால சுழற்சியுடன்
கண்ணுக்குப் புலப்படாத
முதுமைத் தூரிகை
உடலெங்கும்
கோடுகளால் கோலமிட்டுச் செல்ல
போதை மிகுந்த திராட்சையாய்
போசாக்கு மிகுந்த மாங்கனியை
மிஞ்சிய
நெல்லிக்கனி ஒன்றாகி
ஒருவருக்கொருவர்
மருந்தாக விருந்தாக
உள்ளம் நிவாரணம் அடைகிறது.

காலத்திற்கேற்ற கனிகளைப் போல
இல்லற வாழ்க்கையும் கனிகிறது
கனிந்து
சுவைத்தருகிறது.

(ஒரே பூமியில் நாணும் நீயும் தொகுப்பி லிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கவி செ.மோகன்ராஜின் "பனி மழையில் தீயிலிருந்து" கல்லறைக்கு முன்னால்



ஓ....
என் அருமை
சொந்தங்களே...!
உங்களைத்தான்....

விடிவுகளுக்காக
அழகான
வாழ்வை
மெழுகுத்திரியாகிப் போன
உங்கள் கல்லறைகளுக்கு
முன்னால்
என் கவிதைகள்
எப்பொழுதும்
கண்ணீர்
வடித்துக் கொண்டிருக்கும்.

ஓ....
என் அருமை
சொந்தங்களே....!
அடிமைப் போர்வையின் கீழ்
குளிர் காய்ந்த காலங்களைச்
சவக்குழிக்குள் அனுப்பி
சுதந்திர வெயிலில்
ஓடிவிளையாடும் வரை
என் கவிதைகள்
இருள்மேகங்களை
விலக்கிவிடும்

ஓ...
என்
அருமை சொந்தங்களே...!
ஜாதி அலைகள்
இனிமேல்
கரையைக் காணாமல்
கடலுக்குள்ளே
புதையட்டும்.


அப்போ
உங்கள் கல்லறைகளுக்கு
முன்னால்
என் கவிதைகளால்
தாலாட்டுப் பாடி
ஆனந்தக்
கண்ணீர் விடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# குளவி

பாலா.சங்குப்பிள்ளை



" அம்மா ராத்திரி எல்லாம் மழை விடாம கொட்டுனதும் பத்தாம இப்ப காலையிலேயே தூர ஆரம்பிச்சிடிச்சி. இன்னைக்கும் வேலைக்குப் போய்த் தான் ஆகணுமா...?"

" என்னடி செய்யிறது தீபாவளிக்கு இன்னும் கொஞ்சநாள்தான் இருக்கு. உன் அப்பன் கெடைக்கிற சம்பளத்தை குடிச்சே அழிச்சிடுறான். நாளும் பொண்ணாப் பெத்திட்டு உதவிக்கு ஆளில்லாம அல்லாடுறேன். கஷ்டம் போகணும்னு இஷ்டப்பட்டு படிச்ச படிப்பை விட்டுட்டு நீ காமன்ஸ்சுக்கு வேலைக்கு போற. ரெண்டாவது கொழும்புல வேலை செஞ்சாலும் கொழுப்பு எடுத்து திரியிறா. உன் அப்பன் மாசம் தவறாம கொழும்புக்கு போய் அவ சம்பளத்தையும் வாங்கி வந்து குடிச்சு கும்மாளம் போடுறான்...."

காமாட்சி வழமைப்போல அந்த விடியற்காலையிலேயே புலம்பத் தொடங்க அவள் மூத்த மகள் பூஞ் சோலை நீண்ட பெருமூச்சுடன் அடுப்பு பற்றவைக்கப் போனாள். சரியாக 7.00 மணிக்கு ஏனைய பெண்களுடன் கொழுந்துக் கூடை தலையில் தாங்கி யிருக்க மலையில் ஏறினாள். வழமை யாக அவள் கொழுந்துப் பறிக்கும் இடத்தில் வேறு பெண்கள் மாற்றப்பட்ட மையினால் புதிதாக இந்த இடத்திற்கு வந்திருந்தாள். அதற்கு எட்டாம் நம்பர் மலை என்று பெயர். மிக உய

மலைப் பகுதியைக் கொண்டிருந்த அந்த பகுதிக்கு கொழுந்து பறிப்பதற்கு யாருமே வரப் பயப்படுவார்கள். காரணம் குளவிகள்..... ஏராளமாக படர்ந்து விரிந்த கிளைகளுடன் நீண்டு வளர்ந்த மரங் களின் கிளைகளில் ஆங்காங்கே குளவிக் கூடுகள் இருந்தன. இதுவரை அவை களால் யாருக்கும் எந்த தொந்தரவுகளும் ஏற்பட்டதில்லை. ஆனாலும் அந்த மலை யில் வேலைசெய்யும் போது அனைவரும் ஒருவித பீதியுடன் எச்சரிக்கையுடன்தான் இருப்பார்கள்.

காமாட்சி வேகமாக கொழுந்துப் பறித்துக் கொண் டிருந்தாள். மழை தூறலாக பெய்துக் கொண்டிருந்தது. சரியாக 8.00 மணியிருக்கும் காமாட்சி வேலை செய்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில் முதலில் அந்த அலறல் ஒலிக் கேட்டது.

"ஐயோ.... குளவி கொட்டுது. ஓடுங்க... ஓடுங்க..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுதான் மலையை விட்டு அனைவரும் அலறல் சத்தத்துடன் கீழே இறங்கத் தொடங்கினார்கள். அனைவரையும் குளவிகள் விடாமல் துரத்தித் துரத்தி கொட்டத் தொடங்கின. சுமார் 20ற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் விழுந்தும் எழுந்தும் அலறியப்படி கீழே மண் பாதைக்கு வந்தார்கள். உடனடியாக அவர்கள் தோட்ட லொறியில் கும்பலாக ஆடுமாடு களைப் போல ஏற்றப்பட்டு அரச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்கள். குளவி கொட்டிய வேதனைத் தாங்காமல் மற்றவர்களுடன் சேர்ந்து காமாட்சியும் கத்தினாள்.

"எழவுவெடுத்தவனுக, வேலைய மட்டும் வாங்க பாக்குறானுங்க.... எங்களைப் பத்தி யோசிக்க மாட்டேங் கிறாங்க.... வயித்து சோத்துக்காக உசுரையே குடுக்க வேண்டியதா இருக்கு...."

சரியாக 9.00 மணிபோல் பூஞ்சோலை பதற்றத்துடன் ஓடி வந்தாள்.

"அம்மா... அந்த கொளவிகளால நீங்க எல்லாம் உயிர் பொளச்சிட்டீங்க அம்மா...."

"அட புரியாதவளே என்ன ஒளறுற... கொளவி கொட்டுனதுல உசுரே போறமாறி வலிக்குது.... நீ என்னடான்னா என்னமோ சொல்லுற... ஒனக்கு பயித்தியமா?"

"அட சொல்லறத கேளு. எட்டா நொம்பர் மலயில பயங்கர மண்சரிவு, கல்லுப் பாறைகளெல்லாம் உருண்டு வந்து ரோட்டையே மறச்சிடிச்சி. நீங்கல்லாம் அங்கமட்டு தொடர்ந்து வேலை செஞ்சிகிட்டு இருந்தீங்கன்னா எல்லோரோட உடலையும் மண் சாப்பிட்டிருக்கும். கொளவிகதான் உங்கள எல்லா சரியான நேரத்தில காப்பாத்தி இருக்கு. இது உண்மையிலேயே கடவுள் செயல்தான்."

காமாட்சி உடம்பு வலியையும் மறந்து திகைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள்.

## சுட்டிக் கவிதைகள்

தார் ரோட்டிலும்
மண் அள்ளுகிறார்கள்
மனிதர்கள்
செட்டித்தெரு!

-------

உறவுகளை விட
மேலாய் தெரிகிறது
காசில்லா போது
மன்னிப்பு கேட்கும்
கைப்பேசி!

- ஈழ கணேஷ்

-------

சோடி

சண்டைப்பிடிக்காத
சரியான சோடிகள்
செருப்புக்கள்.

- வெலிமடை ஜஹங்கீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின் பார்வையிலே

# ஜோதியின் "குங்குமச் சிமிழ்"



" ஒரு பெண்ணானவள் குங்குமச் சிமிழிற்கு நிகராகின்றாள். இந்த மங்களப் பொருளான குங்குமத்தைத் தாங்கும் சிமிழ்போல, மரபுவழி பண்பாட்டுப் புனிதங்களையும் பேணி பாதுகாக்கவேண்டியவள் பெண்தான். அப்பெண்ணே உரிமைக்குரியவள், உண்மைக்குரியவள்" என்று தமது ஆசிரியர் உரையில் ஜோதி எம்.ஏ அவர்கள் குறிப்பிடும் உணர்வுபூர்வமான கருத்து அறிவுபூர்வமாகவும் ஆக்கத்திற்குரியது, அதுவே தமிழ் மரபாகும்.



தமிழ் மரபுடன் ஆன்மீகம், மதம் சார்ந்த பண்புகள் இரண்டறக் கலந்து இருப்பது எமது பண்டைய இலக்கியங்கள் இயம்பும் எதார்த்தம். அதுதானே நமது பலம்.

"ஆசிரியர் கதை சொல்லும் முறையும், கையாளும் மொழி நடையும் கவர்ச்சியாகவும், ரசனைக்குரியதாகவும், இருக்கின்றன. அதனால் இவையெல்லாம் உண்மையாக நிகழ்ந்த செய்திகள் தானோ எனும் எண்ணத்தைத் தூண்டுகின்றன." என்று **கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்கள்** அளித்துள்ள அணிந்துரையில் குறிப்பிட்டிருப்பது பொருத்தமான கருத்தாகும்.

குங்குமச்சிமிழில் 12 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு சிறுகதையும் நமது சமூகத்திற்கு முக்கியமான செய்தியை கூறுவதற்கு முயற்சிக்கின்றன.

"இந்நூல் ஆசிரியை தனது உள்ளக்கிடக்கைகளின் முழு ஆதங்கங்களையும் சிறுகதைக்குள் கொண்டுவர முயற்சிப்பது "சிறுகதைக்கான" சில கட்டுமானங்களையும், வரைபுகளையும் தாண்டுவதைப் போலவும் நான் காண்கிறேன்." "இவற்றிற்கு மேலாக சொல்லப்பட்ட விடையங்கள் யாவும் சொல்லப்பட வேண்டியதே என்பதையும் மறுக்க முடியாது" வாழ்த்துரை வழங்கிய **கனகசபை தேவகடாட்சம்** அவர்கள் கருத்துரைக்கிறார்.

இக்கருத்தோடு **திருமதி நிர்மலா பரராஜசேகரம்** ஆகிய ஜோதி எம்.ஏ எழுதியுள்ள கதைகளில் கதை கூறும் அம்சம் உண்மைச் சார்ந்திருந்த போதும் கதையோடு கட்டுரைக்கும் போக்கு சிறுகதையின் போக்கில் சில கட்டுமானங்களை மீறிவிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஆசிரியர் ஜோதி எம்.ஏயின் கன்னி முயற்சி என்பதால் சிறுகதைக்குரிய இயல்பை மீறி தனது எண்ணங்களை எழுத்துருவாக்கம் செய்துள்ளார். இதற்காக இவரது எழுத்தை, கருத்தை நாம் என்றும் நிராகரிக்க முடியாது.

ஒரு சமூகத்தின் அவல நிலையை, அயல்நாடுகளில் படும் அவதிகளை அவரது அனுபவமாக உணர்ந்து, அவதானித்து, ஓர் ஆரோக்கியமான சமூகமாக நாம் பண்பாட்டை மறவாது, புனிதங்களை பேணி இனிதாக எங்கிருந்தாலும் வாழவேண்டும் என்பதில் ஆசிரியர் ஜோதி எம்.ஏ. அவர்கள் அசாத்திய நம்பிக்கை கொண்டுள்ளார். அதற்கான அவரது எழுத்துப்பணி இன்னும் வளர வேண்டும்.

**"ஒரு குறிப்பிட்ட சம்பவத்தில் மனித மனம் படும் பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறையை குறிப்பதே" சிறுகதை என்று கூறுகின்றார் பேராசிரியர் கா. சிவதம்பி அவர்கள்.**

குங்குமச் சிமிழில் அடங்கியுள்ள 12 சிறுகதைகளும் 12 கருப்பொருளைக் கொண்டு படைக்கப்பட்டிருப்பதும் புலம்பெயர்ந்து வாழும் நமது தமிழ் மக்களின் வாழ்வியலை அவர்களது அவலங்களின் அதிர்வை, எதிர்கால வாரிசுகளின் வளர்ச்சிப் போக்குகளை எதார்த்தமாக ஆசிரியர் ஜோதி எம்.ஏ. நமக்கு புரியவைப்பதில் மிகவும் வெற்றிப்பெற்றுள்ளார்.

"12 சிறுகதைகளையும் ஆழ வாசித்த வகையில் நான் சில உண்மைகளைக் கண்டுகொண்டேன்".

"முக்கியமாக 12 கதைகளிலும் 12 கருக்களை உள்ளடக்கி, சைவ உணவின் முக்கியத்துவம், ஒழுக்க நெறி, காதல், வீரம், தர்மம், பேராசை, முயற்சியால் பெறும் முயற்சி, நாட்டுப்பற்று, பெற்றோரை நேசித்தல், கல்வியின் முக்கியத்துவம், பெண்கள் அடக்குமுறை, பெண்கள் ஒழுக்கம், பிள்ளைகளை வளர்க்கும் முறை போன்ற நல்ல விடயங்களை கருப்பொருளாக கொண்டு தன் கதைகளை எழுதியுள்ளார்".

"ஆசிரியரை தனிப்பட்ட ரீதியில் அறிந்தவர் என்ற வகையில் அவர் ஒரு தாயாக, குடும்பத் தலைவியாக, ஆசிரியராக, கட்டுரையாளராக, ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டவராக, சமூக சேவகியாக பன்முகம் கொண்டு பல சேவைகளுக்கு மத்தியில் நல்ல கருத்துக்களை சுமந்துவரும் சிறுகதைகளை வெளியிட முயற்சித்து, அதை வெளியீடும் செய்திருக்கும் அவருக்கு சபாஷ் கூறவேண்டும்" என்ற தமது வாழ்த்துரையில் **திருமதி கமலாம்பிகை ரட்னராஜ்** எழுதியுள்ளார்.

ஆம்; **ஆசிரியர் ஜோதி எம்.ஏ.** அவர்களுக்கு தமிழ் கூறும் நல்லுலகமே சபாஷ் சொல்லும் காலம் வரும். அடுத்து வரும் அவரது சிறுகதைப் படைப்பு சில குறைகளை நீக்கிவிடின் நிறைவாக நிச்சயம் "நிறைகுடமாகும்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்முகம்

# "பழம்பெரும் நாடகக் கலைஞர் நடராஜாவுடன் ஒரு சந்திப்பு"

ஓம் சரவணா புரொடக்ஷன் நாடகமன்றத்தின் மூலம் சுமார் 10 நாடகங்களை அரங்கேற்றிய கலைஞர் எஸ்.என்.நடராஜாவை எமது 'சினிவேன்ட்' ஒலிப்பதிவு நிலையத்தில் வைத்து நேர் கண்டபோது எனது கேள்விகளும் அவரது பதில்களும்.



◆ *கலைத்துறையில் கால் பதித்தது பற்றி...?*

1965 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மலையகப் பகுதிகளில் நடைபெறும் நாட்டுக்கூத்து மேடை நாடகங்களில் நடித்தேன். சினிமா ஆசையும் என்னை சிறைப் பிடித்தது. தலைநகருக்கே ஓடி வந்துவிட்டேன். தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்ததோடு இணையாக இன்னொரு வேலையையும் செய்தேன். சிலோன் ஸ்டுடியோவில் பணியாற்றியதே அவ்வேலை. 'ஓம் சரவணா புரொடக்ஷன்' என்ற நாடக மன்றத்தை 1965க்கப் பின்னர் நிர்வகித்தேன். அம்மன்றத்தின் ஊடாக 10 வரையிலான நாடகங்களை மேடையேற்றியுள்ளேன். அதில் சுமார் 7 நாடகங்களை இயக்கியுமுள்ளேன்.

◆ *அந்நாடகங்கள் எவை என்பது பற்றிக் கூறமுடியுமா?*

"எங்கே நீதி", "உன்னை நான் சந்தித்தேன்", " யாரைத்தான் நம்புவதோ" "பருவம் ஒரு பாடம்", "வாழ்வு மலர்ந்தது" "வெள்ளிக் காசுகள்" என்று ஒரு சில அடங்கும். இந்நாடகங்களில் "யாரைத்தான் நம்புவதோ", "வாழ்வு மலர்ந்தது" போன்ற மேடை நாடகங்களுக்கு மறைந்த இசைமேதை ஆர்.முத்துசாமி இசையமைத்திருந்தார். அந்நாடகங்களுக்கான பாடல்களைக்கூட ஈழத்து ரத்தினம் எழுதியிருந்தார். நாடகங்களிலே பாடல்களைப் புகுத்தியவன் என்ற அடையாளம் நாடக உலகில் எனக்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ *திரைப்படங்களில் ஒரு சில காட்சிகளில் நடித்துள்ள தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி?*



ஏ.ஏ.ஜுனைதீன் கதை, வசனத்தில் உருவான 'நெஞ்சுக்கு நீதி' திரைப்படத்தில் தமிழக நடிகர் ஸ்ரீகாந்த், மலேஷியா நடிகர் சிவாஜிராஜா மற்றும் நம் நாட்டுக் கலைஞர்களோடு நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

தொடர்ந்து படப்பிடிப்பில் பலசிக்கல்கள் இடையூறுகள் ஏற்பட்ட பட்சத்தில் தயாரிப்பாளர்களில் நானும் ஒருவனாக கை கொடுத்திருக்கிறேன். அப்படத்தின் 'டைட்டிலில் என் பெயர் இருந்தது. படத்தில் நான் இல்லை'.

'ஆழிக்கரையின் அன்புக் காணிக்கை' பலரின் கூட்டுத் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட படம். அதில் நானும் நடித்ததோடு ஒரு சிறிய பங்காளியாகவும் சேர்ந்தே இருந்தேன். படம் முற்று முழுதாக படிப்பிடிப்பு முடிந்து திரைக்கு வரும்போது 'மீனவப்பெண்' என்ற பெயரில் திரையிடப்பட்டது. ஆவலோடு அந்தப் படத்தில் என்னைத் தேடினேன். ஒரு காட்சியிலும் கூட என்னைக் காணவில்லை. இப்படிச் சில அனுபவங்களும் ஏமாற்றங்களும்....

◆ *அன்றைய அரங்கு செலவுகள் எப்படியிருந்தது?*

அதிகம் தேவையில்லை. அன்று 1982 காலப்பகுதியில் டவர் அரங்கில் 'உன்னை நான் சந்தித்தேன்' நாடகத்தை மேடையேற்றிய போது வெறும் ஐநூறு ரூபாய்தான் அரங்கக் கட்டணமாக இருந்தது. இப்போதோ கட்டணங்கள் மளமளவென ஏறிவிட்டன. நாடகம் போடுவது கஷ்டமான பிரவசமாகிவிட்டது.

◆ *மேடையில் நடிக்க நடிகர், நடிகையர் தட்டுப்பாடு நிலவுகிறதே?.*

◆ நமது 'தமிழ் நாடகத்துறை' வருமானம் வரும் துறையாக இதுவரை மாற்றப்படவில்லை. அவ்வாறு இத்துறை மாற்றம் அடைந்திருந்தால் சிலவேளை இளைஞர்கள், யுவதிகள் நடிப்பதற்கு முன்வந்திருக்கலாம்! அன்று தொட்டு இன்று வரை மேடை நாடகங்களைப் பொறுத்தவரை நாடகங்கள் தயாரிக்கின்ற பெரும் தயாரிப்பாளர்கள் நம்மிடையே இல்லை. சரியான ஊதியத்தைக் கூட நாடகங்களில் பங்குகொள்பவர்கள் எதிர்பார்க்க முடியாது!

1943இல் பிறந்து 73 வயதை தொட்டு நிற்கும் 'கலாபூஷணம்' எஸ்.என்.நடராஜாவிடம் நீட்டிய இன்னும் சில கேள்விகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



◆ *தாங்கள் இறுதியாக மேடையேற்றிய நாடகம் பற்றி...?*

மறைந்த கலைஞர் லடீஸ் வீரமணி கதை, வசனம், எழுதி 'வெள்ளிக் காசுகள்' நாடகமே நான் இறுதியாக மேடையேற்றியது. 19.12.2004 அன்று லும்பினி மண்டபத்தில் அரங்கேற்றினோம். என்னுடன் மல்லிகா, எஸ் செல்வராஜ், போன்ற பலர் நடித்தனர். கலைஞர் கலைச்செல்வனும் இந்நாடகப் பிரதியில் சில திருத்தங்களைச் செய்து தந்தார். கே. மோகன் குமார் ஒளியமைப்பை செய்தார். இருபத்தி ஐயாயிரம் செலவழித்து இந்நாடகத்தில் நஷ்டப்பட்டேன். அரச நாடக விழாவிலும் இந்நாடகத்திற்கு சரியான தீர்ப்பு கிடைக்கவில்லை. என்னுடன் சில நாடகங்களில் பணியாற்றி நடித்த ஆத்ம நண்பன் எம்.மொஹிதீன் 'வெள்ளிக்காசுகள்' மேடையேற்றத்தின்போது உயிருடன் இல்லாதது குறையாக இருந்தது.

◆ இப்போதும் நடிக்கும் ஆர்வம் இருக்கிறதா?

நடிக்கவேண்டும் என்ற ஒரே ஆர்வம் மட்டுமே என்னிடம் தேங்கியிருக்கிறது. சிங்கள நாடகத்துறைக்கு கிடைக்கும் வரவேற்பு தமிழ் நாடக கலைஞர்களுக்கு கிடைக்கவில்லை என்ற ஆதங்க நிலையும் உள்ளது. 'நடித்து எதைக் கண்டோம்' என்ற வெறுப்பு நிலையும் ஏற்படுகிறது. கலைஞர்களின் குடும்பத்தாரும் இவற்றை வரவேற்பதில்லை. நடிகன் என்று மக்கள் மெச்சுமளவிற்கு தனித்துவ அடையாளம் இங்கே தமிழ் நடிகர்கள் யாருக்கும் கிடைக்கவில்லை. அந்த ரீதியில் சிங்களக் கலைஞர்களும் தென்னிந்தியக் கலைஞர்களும் அதிர்ஷ்டசாலிகள். மற்றும் பழைய நாடகங்களே மீண்டும் மீண்டும் இங்கு மேடையேற்றப்படுகின்றன. புதிய நாடகங்கள் இல்லை. புதிய எழுத்தாளர்களும் இல்லை. இந்தக்குறை நீக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி தொலைக்காட்சி கூட நம்நாட்டுக் கலைஞர்களைக் கொண்டு புதிய நாடகங்களைத் தயாரிப்பது வரவேற்புக்குரியது.

கலைஞர் நடராஜாவில் மனைவியின் பெயர் ஸ்ரீமதி பத்மாவதி. நான்கு ஆண்பிள்ளைகள். (பிரதீப், பிரசாத், ரவீந்தர், நந்தகுமார்) நல்ல வசதியுடன் பிள்ளைகள் வாழ்வது நடராஜாவுக்கு கிடைத்த பாக்கியம்.

முகவரி:
எஸ்.என்.நடராஜா
01/4, A. 21
பாம் வீதி,
மட்டக்குளி



நேர்க்கண்டவர்
ஏ.எஸ்.எம்.நவாஸ்

# Facebook

வீட்டில் இருத்தல் வேறு
பேஸ்புக்கில் இருத்தல் வேறு
வீட்டில் இருந்த பேஸ்புக்கில் இருத்தல் வேறு
பேஸ்புக் இருப்பில் யாரும் வீட்டில் இருப்பதில்லை.
சமத்தாய் வீட்டிலிருக்கிற
பேஸ்புக்கில் இருக்கும் கணவனை
மனைவி வையாமல் இருப்பதில்லை
வைதாலும் மனசு கேட்பதில்லை.
சில வீடுகள் வித்தியாசம்
கணவனும் மனைவியும்
பேஸ்புக்கில் இருப்பதே தக்கவைத்திருப்பார்கள்



அதிர்ஷ்டவசமாய் பிள்ளைகள் இருந்தால்
பிள்ளைகளும் பேஸ் புக்கில்,
தினம் பேஸ்புக் வீடுகளில்
உணர்வற்ற உரையாடல் கேட்கிறது
கணவன் பசிக்குது என்பதை
மனைவிக்கு இன்பொக்ஸில் சொல்லவேண்டியிருக்கிறது.
சுட்டிப் பிள்ளைகள் இருக்கும் வீட்டிலும்
முகநூலில் புன்னகைத்தல் மௌனம் சம்பவிக்கும்
பேஸ்புக் ஆச்சிரமத்தில் ஒருவகைத் தியானத்தில்
உறைநிலை மனிதர்களாக
உணர்வுகள் லைக்கில் தொங்கி நிற்கும்
மனித இருப்பு காலாவதியாகிவிட்டது
இப்போது யாரும் வீட்டில் இல்லை
அலுவலகத்தில் எங்குமே இல்லை
பேஸ்புக்கில் குடியாகி இருக்கிறார்கள்.

எஸ். ஜனூஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கிரம கொடித்துவக்குவின் "தெய்வத்தின் மக்கள்"



**எம்.எச்.எம்.ஷம்ஸ்**

மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்களின் அவலம் நிறைந்த வாழ்க்கையை சிங்களத்திலே முதன்முதல் காவியமாக வடித்துத் தந்துள்ளார் பராக்கிரம கொடிதுவக்கு. 'தெவியன்கே' மினிசுன் – தெய்வத்தின் மக்கள் என்பதே நூலின் தலைப்பு. புத்தகத்தின் அட்டையிலே தமிழிலும் தலைப்பு போடப்பட்டிருப்பது கவிஞரின் மனித நேயத்தைக் காட்டுகிறது.

காவியம் என்று இதனைக் குறிப்பிடக் காரணம் கவிதைகள் சங்கிலித் தொடராக இறுதிவரை செல்கின்றமை யாகும். மரபாகவும் புதுக் கவிதைகளாக வும் நாட்டுப்பாடல் பாணியிலும் மணிப் பிரவாகமாக நூல் அமைந்துள்ளது.

தோட்டப் பகுதி மக்களுக்கே உரிய மரபுச் சொற்கள் பாரம்பரியத் தொடர்கள், தமிழ்ப் பிரயோகங்கள் என்பனவும் கவிதையிலே கலந்து உயிர்த் துடிப் பூட்டுகின்றன.

பிரித்தானிய காலனித்துவ காலத்தில் இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் இங்கு கொண்டு வரப்பட்ட வரலாறு சிறப்பாக விபரிக்கப் பட்டுள்ளது. அஸாம் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட தேயிலை விதை 1876ஆம் ஆண்டு ஜேம்ஸ் டேய்லரினால் ஹேவாஹெட்ட மல்கந்துர தோட்டத்தில்தான் முதன் முதல் பயிரிடப் பட்டதாக கவிஞர் குறிப்பிடுகிறார்.

இங்கிலாந்திலிருந்து தேயிலை அரைக்கும் பாரிய இயந்திரம் கொண்டு வரப்பட்டு தொழிற்சாலையில் பொருத்தப் பட்டது. இயந்திரத்தை இயக்குபவர் சாவியுடன் வந்தார். திருகிப் பார்த்தார். இயந்திரம் உயிர்க்கவில்லை. பொறியிய லாளர் வந்தார். ஆணிகளைத் திருகினார். இயந்திரம் யானைபோல அசையாதி ருந்தது. வெள்ளை துரைமார் முகங்க ளிலே ஏமாற்றம் பரவியது.

எங்கிருந்தோ ஒரு பண்டாரம் வந்தார். தலையிலே தேங்காய் ஒன்றை ஏந்தியிருந்தார். இயந்திரத்திலே கொஞ்சம் விபூதியைத் தூவினார். ஏதோ உச்சரித்தவாறே தேங்காயை உடைத்தார்.

மறுபடி நிபுணர் வந்து சாவியைப் போட்டு திருக உர்...உர்..ர்...ர்... என்ற பேரிரைச்சலோடு இயந்திரம் இயங்க ஆரம்பித்தது.

இந்த வரலாறும் கவிதையாக நூலில் இடம் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் என பல பகுதிகளிலிருந்து இந்திய மக்கள் இலங்கை வந்தார்கள்.

1842 - 14 ஆயிரம் பேர், 1843 - 31 ஆயிரம் பேர், 1844 - 71 ஆயிரம் பேர், 1845 - 67 ஆயிரம் பேர். ஆயினும் இன்பக் கனவுகளை மனசுக்குள்ளே புதைத்தவாறு கப்பலேறிய தமிழ் மக்கள் ஏமாற்றமே கண்டனர். உழைப்புக்கு ஏற்ற ஊதியமில்லை. குடியிருக்க வசதியான இருப்பிடம் இல்லை. சுகாதார வசதிகளே இல்லை. ஆப்பிரிக்காவிலிருந்து மேலைத் தேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நீக்ரோ அடிமையர் போல் அவதிப் பட்டார்கள் அவர்கள்.

"மரமும் சேதம்
உடலும் சேதம்
அர்ச்சுணன் ரபர்ப்
பால் வெட்டுகிறான்
மழையில் தெப்பமாய்
நனைந்தவாறு
ஜானகி தேயிலை
கிள்ளுகிறாள்
நாளை அவளின்
வயிற்றிலிருந்து
செல்வம் ஒன்று
முகம் காட்டும்
மூன்றாம் சந்ததி
இதுவும் கூட
அடிமைக் குஞ்சோ
ஆண்டவனே"

என்று ஓலமிடுகிறது கவிஞரின் உள்ளம்.

துரைமாரும் அதிகாரிகளும் தோட்டத் தொழிலாளரை இழிவாக நடத்தியதை கவிஞர் வருத்தத்தோடு குறிப்பிடுகிறார். நூறாண்டுகளின் பின் 1921இல் தொழிற்சங்கம் உருவானது. என்றாலும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி தோன்றவில்லை. அடிமைச் சட்டங்கள் சில அகற்றப்பட்டன.

மலைநாட்டு மக்களது வீடுகள் தகரப் புற்றுக்கள் 10'×12' அளவு கொண்டது.

'ஆண்டு நூறு கழிந்து
தகரம் இத்துப் போயிடினும்
துரைக்கே உரிமையாம்
புதுமை!
பாட்டன் முன்றலில்
நிறுத்திய பலாவின்
உரிமையும் துரைக்காம்
புதுமை!
ஆட்டுக்குப் பத்து
கோழிக்குப் பத்து
விலைக்குக்கும்
தண்டமாம்
புதுமை!
தேர்தல் நாளில்
எம்.பி. வருவார்.
வந்தார் அதுவும்
புதுமை!

என்று தோட்டப் பகுதியின் யதார்த்தத்தை கவியாக்கியுள்ளார் கவிஞர்.

தெய்வத்தின் மக்கள் கவிதையில் இன்னுமொரு விசேஷம் உண்டு. இடையிடையே உபநிடதம், கீதை என்பவற்றின் அறக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமாத்திரமன்று "மகாகவி, குறிஞ்சி நாடன், குறிஞ்சி தென்னவன், ராம் ஜி.உலகநாதன், இஸ்மாலிகா தாவூத், கலா விஸ்வநாதன், பானா தங்கம், பி.மூக்கன், எம்.மஹேந்திரன் போன்றவர்களின் கவிதைகளின் அடிகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.

சுவாமி விவேகானந்தர் 1893இல் சிகாகோ நகரில் நிகழ்த்திய வரலாற்றுப் பிரசித்திவாய்ந்த உரையின் சில பகுதிகளும் கவியாயுள்ளன.

ஆரம்பத்தில் தமிழ்த் தொழிலாளர்கள் வாழ்ந்த மலைநாட்டுப் பகுதியில் சிங்கள மக்களும் வந்து தொழில் செய்யலானார்கள். இரு இனங்களும் கூடி வாழ்ந்தன. 1983 ஜுலை கரும் புயல் வீசத் தோட்டத் தொழிலாளர்கள் கண்டபடி தாக்கப்பட்டார்கள். இதோ கவிஞரின் கண்ணீர் வரிகள். அவர் ஸ்ரீ கிருஷ்ணரிடம் முறையிடுகிறார்.

தோட்டத் தாய்
ஒருத்தியின்
பிளவுண்ட இதயத்தின்
சதைகளை அந்தத்
தீயிலே பாருங்கள்
சிறுமியவள் பிறந்த மேனியை
சாம்பரிலே தேடுங்கள்
கறுத்த தமிழ்ப்
பையனவன்
கைகால் துண்டங்களை
அந்தத்
தீயிலே பொறுக்குங்கள்
மகிமை கொண்ட
நம்மிலங்கா
தேவியவள்
பண்புகளை – அந்த
சாம்பரிலே தேடுங்கள்.

தேவர்கள் சிலையாக நின்றனர். கவிஞர்கள் அழுது புரண்டனர்.

கவிஞர் பராக்கிரம கொடிதுவக்கு மலைநாட்டுத் தோட்ட மக்கள் மத்தியிலே வாழ்ந்தவர். அவர்களது நாடித் துடிப்பை அறிந்தவர். ஜுலை கரும் தீயிலே கருகி அழிந்த தமிழ் மக்களின் அவலத்தை போதிமாதவன் சந்நிதியிலே சமர்ப்பிக்கிறார்.

கருணாதிநிதியே
அருளின் ஊற்றே
மூவுகலனைத்தும்
உங்களால் உய்ந்தது
எனினும் மேதையே
வேரற்ற மரம்போல
உங்கள் தர்மம்
வீழ்ந்தது
மண்ணில் – இன்று
உங்கள் திருப் பெயர்
உச்சரித்தவாறே
'நான்' எனும் களைகள் செழித்து வளர்ந்தன.
இனப் பற்றில் வெறி கொண்டார்.
உங்கள் பொன் மொழி சொன்னார்.
படைவீரர் துணை நின்றார்.
பார்த்தபடி செவிடானார்.
இன சம்ஹாரத்தைத் தூண்டியவர்கள் யார்? என்ற உண்மையையும் கவிஞர் மறைத்துவிடவில்லை.

திருவாளர் தேசபக்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீப்பொறியை
வளர்த்திடலாம்
நிர்மலம் சேர்
பண்டிதர்கள்
எண்ணெயினை
ஊற்றிடலாம்
ராஜ ராஜ
மந்திரிமார்
தீச்சுவாலையை
மூட்டிடலாம்
தீப்பிறந்த
பேய் நாட்டை
துண்டாக்கிப்
போரிடலாம்.

1865ஆம் ஆண்டு பிரித்தானிய காலனி அரசு ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. எந்தத் தொழிலாளியும் தோட்டத்தை விட்டு ஓடிந்தோட முடியாது. அப்படி ஓடியவரைக் கைது செய்யவும் சிறையில் அடைக்கவும் அதிகாரிகளால் முடியும். அடிமை வாழ்க்கையால் மனமுடைந்தோர் பலர்; தொழிற்சாலையிலே விபத்துக்குள்ளானோர் மற்றும் பலர்; தேயிலைக் காட்டிலே விஷப் பிராணிகளால் கடியுண்டோர் வேறும் பலர். இப்படி1841 முதல் 1849 வரை எட்டாண்டுகளுக்குள் 70 ஆயிரம் பேர் உயிரிழந்ததாகக் கவிஞர் கூறுகிறார்.

'பிறநாட்டுப் பொருளாக
கொணர்ந்தார் எம்மை
மீளவும் பொருளாய்
ஏற்றினார் எம்மை
இந்த மண்ணில்
இரத்தத்தை எலும்பை
புதைய்லாக்கினோம்
எனினும் – நாங்கள்
அங்கும் இல்லா
இங்கும் இல்லா
விலங்குகளானோம்."

காலங்கள் தொடர்கின்றன. சந்ததி சந்ததியாக துயரக் கதைகள் தொடர் கதையாகிறது. இலங்கை சுதந்திரமடைகிறது. தொழிலாளர்களோ அடிமையாகின்றனர். வாக்குரிமை பறிக்கப்படுகிறது. அவலங்கள் சகிக்க முடியாதபோது என்ன நடக்கும். ஆம். தோட்ட இளைஞர்கள் பற்றி இப்படிப் பாடுகிறார் கவிஞர்.

தோட்டத்தின் அகதிகளாய்
மலையிலிருந்து
கீழ் விழுந்த
ஆண்கள் அவர்கள்
பேமண்ட் ஓரத்திலே
செருப்பு வார் போடுவோர்
சப்பாத்து திருத்துவோர்
பழங்குடை செய்வோர்
வீடுவீடாய் அலைந்து
போத்தலும் பத்திரிகையும்
சேரத்து விற்போர்
சிங்கள வறியோரின்
பாதநிழல் சேவிப்போர்
ஹோட்டல் சாப்புகளில்
குரலில்லா நிழல்களாய்....

ஆம் இப்படித் தொடர்கிறது தோட்டத் தொழிலாளர் சந்ததியின் பிற்கால அவல வாழ்க்கை.

தோட்டக் கிராமங்களிலே சிங்கள, தமிழ்த் தொழிலாளர்கள் கொண்டும் கொடுத்தும் வாழ்கிறார்கள். சிங்கள மக்களது 'அவுருது' உற்சவங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுகளோடு போய் அன்பைப் பரிமாறும் தமிழ் மக்கள், தீபாவளித் தமிழ் பண்டிகை களில் கலந்து கொள்ளும் சிங்கள மக்கள், கோவிலிலே, பன்சாலையிலே ஒன்று கலக்கும் இரண்டு இனங்கள்.

ஒன்றாக வாழும் அவர்களி டையே காதலும் நேசமும் கூடக் கனிவ துண்டு. கவிஞர் பாடுகிறார்.

ஏழாம் நம்பர்
லைமைச் சேர்ந்த
அஞ்சலிக் குட்டி
புதிய சந்ததி
மைத்திரியோடு
காதலாய் – அப்போ
வாளெடுத்தவராய்
வெட்டிட வந்தார்
மைத்திரிப் பையனின்
உறவாட்கள்
அஞ்சலி மைத்திரி
காதல் சிட்டுக்கள்
பறந்து சென்று
தூரப் பகுதியில்
தனிக்குடித்தனமாய்

இவற்றையெல்லாம் சகிக்க முடி யாத சிங்கள வெறிக் கும்பலைப் பற்றி கவிஞர் இவ்வாறு விளிக்கிறார்.

பூமிப்புத்திர
அதமர்களே
வரலாறும்மைத்
திட்டுகிறது
நாம் சிங்களவர்;
நாமே பௌத்தர்
என்றெல்லாம் கூறி
கருணையை
அருளை அழித்திடுவோரே
16ஆம் நூற்றாண்டில் கோட்டை

அரசனாயிருந்த பராக்கிரமபாகுவை கவிஞர் நினைவுபடுத்துகிறார். பராக்கிரம பாகுவின் ஒரு மகன் ஸ்ரீராஹுல, மற்ற வர் செண்பகப்பெருமாள். ஆம் ஒரு தமி ழர். தனது மகளை இந்தத் தமிழ் வீரனுக்கு மணமுடித்து வைக்கிறார். பராக்கிரம பாகு. கடைசி அத்தியாயத்திலே கவிஞர் இப்படி சொல்கிறார்.

திருசேர் தமிழனே தமிழச்சியே
எங்கள் நாட்டை
எழுப்பிவைக்க
முதுகெலும்பாக
முனைந்துழைத்த
நீங்களெல்லாம்
அந்நியராம் இன்று
தேசத்தின்
கால்களில்
சிறுபான்மையாக
வீழ்ந்து
கிடக்கிறீர்.

தெய்வத்தின் மக்கள் கவிதை நூலில் உள்ளத்தைத் தொடும் வரிவடிவ ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. அது மட்டுமன்றி புகைப்படங்களும் உள்ளன. 1981 ஓகஸ்ட் 14 ஆம் திகதி பெல்மதுல்ல நகரத்தில் இனவெறி தாண்டவமாடிய போது கடைக்கண்ணிகள் தீப்பிடித்து எரிந்தபோது கவிஞர் பராக்கிரம கொடித் துவக்கு தாமே கைப்பட எடுத்த படங்கள் இடம்பெற்றுள்ளன.

ஒரு சிங்கள மனிதாபிமானக் கவி ஞன் மலைநாட்டு தமிழ் மக்களது அவல வாழ்க்கையை கண்டு வடித்த கண்ணீர்க் காவியமே தெய்வத்தின் மக்கள்.

நன்றி: தினகரன்
வாரமஞ்சரி
20.10.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோ. புரட்சியின் "இரண்டு நாய்கள்"



ஈன்ற அம்மா யோ.செல்லமுத்து ஆசியுடன் வள்ளுவர்புரம் யோ.புரட்சியின் "எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும்" கவிதைத் தொகுதியில் "உணர்வுகளை வெளிப்படுத்த, ஒருவனது வலியை மற்றொருவனுக்குப் பாடமாகவும், பாலமாகவும் மாற்ற எழுத்துக்களால் தான் முடியும். வலியை யோ.புரட்சியின் வரிகளில் உணர்கிறேன். மனவலிமையையும் பாராட்டுகிறேன்."சிறையிலே கவிதையில் வாழ்ந்திருக் கிறார். இந்த அன்புச் சகோதரருக்கு சிறந்த எதிர் காலம் உண்டு" என்று காந்தி கண்ணதாசன் கருத்துடன்-

"உள்ளத்துக் கிடக்கைகளை, உழலும் நெஞ்சத்துடன் சொல்லிவிட வேண்டும் என்ற ஆதங்கம், மனப்பாரங் களை இறக்கி வைக்க எண்ணிய யோ. புரட்சி என்ற கவிஞர் சமுதாயத்தின் கண். தாம் தரிசித்த தரிசனங்களைக் கவிதை வடிவில் தந்துள்ளார்" என்று வவுனியூர் இரா.உதயணன் அவர்களின் உள்ளக் கிடக்கையுடன் -

"எழுதுவது ஒரு தவம்" என்று சொல்வார்கள். எல்லோராலும் எல்லா வற்றையும் எழுதிவிட முடியாது. ஒரு படைப்பாளி சமுதாயத்தின் கண். தான் பெற்ற அனுபவங்களை முன்னிலைப் படுத்தித் தமது ஆக்கங்களை வெளிக் கொணருகிறான்."

"எதிர்வீட்டு நாயும் - என் ஏழை நாயும் என்னும் கவிதைத் தொகுதியின் தலைப்பு சமுதாய ஏற்றத் தாழ்வுகளைச் சுட்டி நிற்கின்றது. இக்கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகள் ஏதோ ஒரு விதத்தில் எழுத்தாளரின் அனுபவ பிம்பங்களாகவே காட்சி தருகின்றன. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கவிஞரின் உள்ளக் குமுறல்கள் கவிதை வடிவில் உருவாகி அர்த்தப்பாடுகளை வெளி காட்டி நிற்கின்றன. வரலாற்றுத் தடங் களை முன்னிலைப்படுத்தி எழுந்தவையாகவே இருக்கின்றன" என்று இலங்கை தமிழ் இலக்கிய நிறுவக தம்புசிவா தமதுரையில் குறிப்பிடுகிறார்.

யோ.புரட்சியின் கவிதைத் தொகுப்பில் 50 கவிதைகள் உள்ளடங்கியுள்ளன. ஒவ்வொரு கவிதையும் பிறந்த நேரம், பிறந்த திகதி, இடம், பிரசவமான ஊடகம், பத்திரிகை என்பவற்றை குறிப்பிட்டிருப்பது திட்டமிட்டு செயல்படும் காலத்தை மதிக்கும் படைப்பாளியாக இவரை தெரியப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடியான காலகட்டத்தில், இவரது கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. முதற் கவிதை கானகம் ஒன்றில் எழுதப்பட்டதாகவும், "இடம்பெயர்ந்த ஊரில் இடம் பெயரா நாய்" என்ற கவிதை நூலுக்காக "காவிய பிரதீபா" விருதினைப் பெற்றுக் கொண்டுமுள்ளார்.

இக்கவிதைத் தொகுப்பில் உள்ள ஐம்பது கவிதைகளில் "இறந்த நாள் வாழ்த்துக்கள்" என்ற கவிதையில் இருந்து ஒரு சில வரிகள்.....

"வாழ்க்கை எனக்கிட்ட
வேலியைத் தாண்டி - நான்
குதித்த நாள்.
வாழ்க்கை நூலின்
கடைசிப் பக்கம்
படித்த நாள்.

இனி.... ஏக்கமில்லை
எனை வாட்டும்
வறுமை இல்லை
தலை வெடிக்கும்
சர்ச்சைகள் இல்லை"

"எல்லாம் மாறிற்று
இறப்பு வந்ததால்.
எவருமே சொல்லாததால்
என் ஆத்மா
எனக்கு சொல்லிக் கொள்கிறது
இனிய
இறந்தநாள் வாழ்த்துக்கள்"

புரட்சி என்ற கவிஞன் பெயருக்கு ஏற்றவாறு புரட்சிப் படைப்புக் களை தந்து கொண்டிருக்கிறார். மேலும் தருவதற்கு வாழ்த்துக்கள்.



# Black Board

வெண்கட்டிகளாக
தூய்மையாய் தேய்ந்துபோங்கள்
மண்ணில் மணம் வீசலாம்.
கரும் பலகையாக நிறம்மாறி
கரிபூசிக் கொள்ளாதீர்கள்.

பிரம்பு மாணவர்களுக்கு மட்டுமல்ல
வரம்பு மீறும் உங்களையும்
எச்சரித்து நிற்கிறது.......

நேசத்துக்குரிய ஆசான்களே...
தயவுசெய்து
பள்ளிக் கூடங்களை
"பள்ளியறைகளாக" மாற்றாதீர்கள்.

கற்பிக்கத்தான் நீங்கள்
கற்போடு விளையாடாதீர்கள்...
நாளிதழில் செய்தி
நாராசமாய் நாறுகிறது

"ஆறு மாணவிகள் துஷ்பிரயோகம்
ஆசிரியர் கைது"

**கலைக்கமல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் முன்னேற



பச்சை மலையடிவாரத்திலே
பிள்ளைக் கவி விளையாடுகிறேன் – உழைப்
பாளர்களைப் போற்றுகிறேன் எங்கள்
பாட்டாளி மக்களின் வியர்வைத் துளிகளைப்
பாடல்களாகப் பாடுகிறேன் – அதைப்
பாரெங்கும் முழங்கிட வேண்டுகிறேன்

மூடப் பழக்கத்தின் சட்டிக்குள்ளே
மூழ்கி கிடக்கிற உள்ளங்களும்
மண்வெட்டி பிடித்து மலைதனில்
மந்தைகளாகக் கூடாதென்று
மூச்சுக்கு மூச்சு நான் பாடுகிறேன் – தமிழ்
மூச்சுக்குள்ளே தான் வாழுகிறேன்

கூடை கூடையாகக் கொழுந்தெடுத்து
கூனிக் குறுகி யிவர்கள் வாழ்வதுவும்
நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி
நிதமும் உழைத்திடும் கரங்களின்
வாழ்வு செழித்திட வேண்டுகிறேன் – புது
வசந்தம் வீசிடப் பாடுகிறேன்

எட்டடி லயக் காம்புறாவிலே
ஏழையிவர் தம் வாழ்க்கையிலே
சோகச் சுமைகளை விட்டொழிந்து
சுகம் பலசேர வேண்டுமென்று
விடுதலை கீதம் பாடுகிறேன் – புது
விடியலின் தீபம் ஏற்றுகிறேன்

கொட்டும் பனியிலும் குத்துங் குளிரிலும்
உழைத்திடும் மக்களை காணுகிறேன்
உள்ளம் துடித்து வாடுகிறேன் மலை
மக்களின் கவி நான் பாடுகிறேன் – நம்
மலையகமே முன்னேற வேண்டுகிறேன்

கனிவுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரொலி

கவினில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு அதனை ஆக்கியவர்களே பொறுப்பாளிகள். ஆக்கங்களில் சிறு மாற்றங்களை செய்ய ஆசிரியருக்கு பொறுப்புண்டு.

இந்திய வம்சாவளி மக்கள் முன்னணி தலைவர் அ.முத்தப்பன் செட்டியார் **"இந்திய வம்சாவளி அடையாளமே எமது சமூகத்துக்கு நன்மையானதாகும்"** எனும் கருத்துரைக்கு ஆதரவான எதிரொலி.

## இலங்கைப் பிரஜைகளான இந்தியத் தமிழர்

இந்தியாவையும், இலங்கையையும் ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலகட்டத்தில் இலங்கைக்கு தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட கூலிகளே இந்திய வம்சாவளி தமிழர்கள்.

இக்கூலிகளுடன் வியாபார நோக்குடன் இந்தியத் தமிழர்கள் இலங்கைக்கு வந்தனர். இலங்கை வர்த்தகத் துறையில் பெரும் பங்கு வகித்தவர்கள் இந்த இந்தியத் தமிழர்கள் என்பது வரலாறு ஆகும்.

என்ற போதிலும் இலங்கை சுதந்திரமடைந்ததும் முதன்முதலாக இந்தியத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. வாக்களிக்கும் உரிமை இழந்து நாடற்றவர் என்ற நாமம் சூட்டப்பட்டு, உழைக்கும் அகதிகளாக்கப்பட்டனர்.

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம், என தொடர்ச்சியான சில ஒப்பந்தங்களாக பலர், இந்தியா செல்லவும் சிலர் இலங்கையில் இருப்பது எனவும் தீர்வாயிற்று.

இன்று எஞ்சியவர்கள் அனைவரும் இலங்கை பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, வாக்குரிமையுள்ளவர்களாக வாழ்கின்றனர்.

இன்னும் பெரும்பான்மையோர், பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற தொழிலாளர் கள் நிலவுரிமை இல்லாது 'லய' குடியிருப்பு அகதிகளாகவே வாழ்ந்துக் கொண்டிருக்கின்றனர். இதுவும் கிடைத்துவிட்டால் முழுமையான இலங்கை பிரஜைகளாகி விடுவார்கள்.

மாறாக – இந்திய வம்சாவழித் தமிழர்களின் அரச ஆவண அடையாளம் "இந்தியத் தமிழர்" என்றே இருக்கின்றது. இவர்களது தொழிற் சங்க, அரசியல் தலைமைகளும் தனித்த ஒரு பிரிவாக இயங்கி வருகின்றனர்.

மலையகத் தமிழர்கள் என்று அழைக்கப்பட்டாலும் அது குறியீட்டு அடையாளமாகவே உள்ளது. மலையகம் மற்றும் நாடெங்கும் வாழும் இந்திய வம்சாவளி தோன்றல்களான தமிழரை "இந்தியத் தமிழர்" என்று அடையாளப் படுத்துவதே அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொள்ள வழிவகையாகும்.

**கொழும்பு – 15** **– "வீசம்"**


'கவின்' பதிப்பகம் 1/4, B27, பாம் வீதி, கொழும்பு – 15
வெளியிடுபவர்: கலா விஸ்வநாதன் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவின்

கவின் Kawin

இது ஒரு சமூகத்தின் சஞ்சிகை




காலம் புகழ

மேலும் மலர

நல்வாழ்த்துக்கள்

ஓர் அன்பர்



## ஓர் அன்பான தகவல்

கவின் சஞ்சிகையை தொடர்ந்து பெறுவதற்கு ஆர்வமுள்ளவர்கள் சந்தாவை செலுத்துவதற்கு என்ன வழி என்று நேரிலும் தொலைபேசியிலும் கேட்கிறார்கள். அவர்களுக்காக ஓர் அன்பான தகவல்.

| | |
|---|---|
| ஒரு வருடச் சந்தா | ரூபா 360/= |
| தபாற் செலவு | ரூபா 140/= |
| மொத்தம் | ரூபா 500/= |

சந்தாத் தொகை ரூபா 500/= ஐ

**V.Ramya - 4069015 Bank of Ceylon** வைப்பிலிட்டு வைப்பிலிட்ட சீட்டை "கவின்" விலாசத்திற்கு தவறாது தயவுசெய்து அனுப்பி தொடர்ந்து சஞ்சிகையை பெற்றுக் கொள்ளுமாறு அன்பாக தகவல் தருவதில் மகிழ்கின்றோம்.

**Kawin**

**P.O.Box 2281 - Colombo**

**Tel: 0776576728**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவின்

கவින් Kawin

இது ஒரு சமூகத்தின் சஞ்சிகை



கனடா படைப்பாளிகள், உலக உறுப்பினர்களும் மலேசியாத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரும் அண்மையில் இலக்கிய சுற்றுலாவை மேற்கொண்டு இலங்கை வந்திருந்தனர். அவ்வமைப்பினருக்கு "கவின்" சஞ்சிகையின் ஒரு தொகுதியை அன்பளிப்புச் செய்வதற்காக **வலம்புரி கவிதா வட்ட ஸ்தாபகத் தலைவர் கவிஞர் தாசிம் அகமது அவர்கள் "கவின்" ஆசிரியர் கலா விஸ்வநாதன் அவர்களிடமிருந்து** பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

**உங்கள் ஆக்கங்கள்....**

**"கவின்" சஞ்சிகையில் இடம்பெறும் விதத்தில் சுருக்கமான உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். "கவின் பார்வையில்" படுவதற்கு உங்கள் புத்தகங்களின் ஒரு பிரதியை அனுப்பவும்.**

**"Kawin" - P.O.Box - 2281 - Colombo**

**Email: kawinmagazine@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org